# புலம்: பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பதறிவு - காலாண்டிதழ்

Vol.6: Issue. 1, January 2026 ISSN : 2583-0139



பதிப்பாசிரியர்

முனைவர் ச.தங்கமணி

# PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

Vol.6: Issue –1, January – 2026 ISSN:2583-0139

# புலம்: பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பதறிவு - காலாண்டிதழ்

# PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

**பதிப்பாசிரியர்**

முனைவர் ச.தங்கமணி

**Editor-in-Chief**

Dr S.Thangamani

**இணைப் பதிப்பாசிரியர்**

முனைவர் ச.கோபிநாத்

**Associate –Editor**

Dr C.Gobinath

**ஆசிரியர் குழு**

முனைவர் மனோன்மணி தேவி

முனைவர் ஜா.அமிர்தலெனின்

முனைவர் ஆ.முத்தையன்

முனைவர் க.வெள்ளியங்கிரி

முனைவர் சா.யமுனாதேவி

முனைவர் இரா.கோகுல்

முனைவர் ரா.பிரேம் குமார்

**நிறுவனர்**

முனைவர் ம.சிவபாலன்

மசிவன் பதிப்பகம்

3/199 ஆ.கூடலூர், ஆய்ந்தூர் (அஞ்சல்)

கண்டாச்சிபுரம், விழுப்புரம் - 605755

editor@pulamejournal.com

editor@masivanpathippagam.com

pulamejournal@gmail.com

+919486069548

© Copyright to PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES 2025 • All Rights Reserved •

## Index


| S.No | Title & Author | Pages |
|---|---|---|
| 1 | The Motherly Attribute of the Pig in the Octave Internal Songs / எட்டுத்தொகை அகப்பாடல்களில் பன்றியின் தாய்மைப்பண்பு<br>**Sumithra.R, Mohan Gandhi. G / சுமித்ரா.ரா, மோகன்காந்தி. க** | 01 |
| 2 | Marudha Nilathin Iruverana Siraippura Chuzhal / மருத நிலத்தின் இருவேறான சிறைப்புறச் சூழல்<br>**Thilagavathi.A, Sivabalan.M / திலகவதி. அ, சிவபாலன். ம** | 08 |
| 3 | Kollimalai Malaiyali Inamakkalin Vazhviyal Nilaippadu / கொல்லிமலை மலையாளி இனமக்களின் வாழ்வியல் நிலைப்பாடு<br>**Thennarasu. K / தென்னரசு. கி** | 16 |
| 4 | Reflections on Contemporary Parent's found in the Works of V. Iraianbu / வெ. இறையன்பு படைப்புகளில் காணலாகும் சமகாலப் பெற்றோர்கள் குறித்தானச் சிந்தனைகள்<br>**Vignesh Kumar.P / விக்னேஷ்குமார்.பா** | 25 |

# எட்டுத்தொகை அகப்பாடல்களில் பன்றியின் தாய்மைப்பண்பு

# The Motherly Attribute of the Pig in the Octave Internal Songs

**சுமித்ரா.ரா, மோகன்காந்தி. க**

தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் – 635601, திருப்பத்தூர் மாவட்டம்.

**Sumithra.R, Mohan Gandhi. G**

PG and Research Department of Tamil, Sacred heart college,(Autonomous),
Tiruppatur- 635601, Tiruppatur District.

ORCID: https://orcid.org/0009-0009-8354-564X

**DOI: 10.5281/zenodo.18382965**

## Abstract

This article is centred on the eight hymns of the study group literature. This review focuses on the elements of motherhood inherent in the pig in the eight volumes of sangam literature. Motherhood is common to all living things in the world. In this way, the life cycle of the mothered animals is studied through the recordings of the octogenarians. The biological environment of the sow, including the habitat environment, neglecting and rearing her young, is critical.

## ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கிய நூலான எட்டுத்தொகைப் பாடல்களை மையப்படுத்தி இக்கட்டுரை அமைகிறது. சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகையில் பன்றி என்னும் உயிரினத்தில் கலந்துள்ள தாய்மைப் பண்பின் கூறுகளை மையப்படுத்தியே இவ்வாய்வுக் கட்டுரை ஆராய்கிறது. தாய்மை என்பது உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்திற்கும் பொதுவானவை. அவ்வகையில் தாய்மை அடைந்த விலங்குகளின் வாழ்வியலை எட்டுத்தொகையின் அகப்பாடல்கள் வழி ஆராயப்படுகிறது. ஈன்ற தன் குட்டிகளைப் புறங்காத்து வளர்த்தல், பாதுகாத்தல், வாழ்விடச் சூழல் உள்ளிட்ட பன்றியின் வாழ்வியல் சூழல் பாடுபொருளாய் அமைகிறது.

**Keywords:** தாய்மை பண்புகள் கூறுகள், புறங்காத்து வளர்த்தல், பாதுகாத்தல், வாழ்விடச் சூழல், வாழ்வியல் சூழல்.

**முன்னுரை**

சங்க இலக்கிய காலம் என்பது கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை இலக்கியங்கள் இயற்றப்பட்ட காலமாகும். தமிழ்மொழி உலக இலக்கிய வரலாற்றில் ஒரு தனித்துவ இடத்தைப் பெற்றுள்ளது. திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்கின்றன. தமிழில் முதன்மை இலக்கியமாகக் கருதப்படும் சங்க இலக்கியம் செவ்வியல் இலக்கியம் ஆகும். பண்டைய காலத் தமிழ்க் குடியின் தொன்மையையும், சிறப்பையும் கூறும் விதமாக அமைவது தமிழ்மொழியும், அதன் இலக்கியமுமாகும். பழங்காலத் தமிழ் மக்கள் வாழ்ந்த வரலாற்றிற்கு மூலமாக விளங்குவது சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியத்தில் மொத்தம் 2381 பாடல்கள் உள்ளன. 1877 அகப்பாடல்களும், 510 புறப்பாடல்களும் சங்க கால மக்களின் இரக்கம், காதல், நட்பு, சினம், மகிழ்ச்சி, வருத்தம் முதலிய உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. பன்றியின் தாய்மைக் குறித்த செய்திகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**விலங்குகளில் தாய்மை உணர்வு**

விலங்குகளிடமும் மனிதர்களிடையே காண முடியாத பல உயர்ந்த பண்புகள் உள்ளன. விலங்குகளின் தாய்மார்கள் தங்கள் குட்டிகளுடனான பாசம், பராமரிப்பு, கவலை, துக்கம், கொடூரத்தன்மை போன்ற பல உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்தத் தாய்மை உணர்வு உயிரினங்களின் தனித்துவமான பண்பாகும்.

**சங்க இலக்கியத்தில் விலங்குகள்**

தொல் பழங்காலந் தொட்டு உலக நாடுகளில் விலங்குகள் குறித்த அறிவு நிலவி வந்துள்ளது என்பதற்குப் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. சிந்துச்சமவெளி கண்டுபிடிப்புகளில் விலங்கு வடிவங்களும், முத்திரைகளும் காணப்படுகின்றன. உலகத்திலேயே திணைக்கோட்பாட்டை வகுத்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள் தான். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என திணை பிரித்து வாழ்ந்த தொல் தமிழர் விலங்குகள் பற்றிய அறிவியல் அறிவினைப் பெற்றிருந்தார்கள்.

பழந்தமிழரிடையே விலங்குகள் குறித்த அறிவு மிகத் தெளிவாக இருந்துள்ளது என்பதற்குத் தொல்காப்பிய மரபியல் சான்று பகர்கின்றது. பதினைந்து வகைப்பட்ட ஆண்பாற் விலங்குகள் பற்றியும், பதின்மூன்று வகைப்பட்ட பெண்பாற் விலங்குகள் பற்றியும் அவ்வவற்றின் இளமைப்பெயர்கள் பற்றியும் தொல்காப்பியர் மரபியல் நூற்பாக்கள் (நூற்பா 2 முதல் 26) உணர்த்துகின்றன. ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரையிலான பாகுபாடுகளையும் தெளிவான அறிவியல் அடிப்படையில்,

**“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**

**இரண்டறி வதுவே அதனொடு நாவே**

**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**

**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**

**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**

**ஆறறி வதுவே அவற்றொடு மனனே**

**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே”** (திருஞானசம்பந்தம், ச. தொல்காப்பியம், பொருளதிகாரம் மூலமும் உரையும், ப. 364, பா.எண். 571)

என்ற நூற்பா தெளிவுப்படுத்தும். அகப்பொருள் துறைகளின் கருப்பொருளாக விலங்கினங்கள் நிலவாரியாகச் சேர்க்கப்பட்டிருப்பது விலங்குகள் குறித்த அறிவை வலுப்பெற செய்கிறது. சங்க இலக்கியத்தில் காணப்படுகின்ற விலங்கின் வடிவங்களைப் பல சங்கப் பாடல்கள் வரிசைப்படுத்தி சுட்டிக்காட்டினாலும், இக்கட்டுரை காட்டுப்பன்றிகளின் தாய்மை உணர்வை வெளிப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளது.

**காட்டுப்பன்றி**

பன்றிகளும் தமிழர்கள் வாழ்வில் ஒரு அங்கம்தான் என்பதற்குச் சான்றாக சங்கம் கால இலக்கியங்கள் திகழ்கிறது. பன்றி என்னும் விலங்கினைக் குறிப்பிடும் பெயர்களாக கேழல், ஏனம், முளவுமா, அரி, கோட்டுமா, களிறு, எய், எய்ம்மா போன்றவற்றைச் சங்க இலக்கியப் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். உணவுச் சங்கிலி என்பது ஒரு உயிர் இன்னொரு உயிரைச் சார்ந்து வாழ்கிறது. பன்றிகளை உணவாக உட்கொள்ளக் கூடிய விலங்குகளாகும். மனிதர்களும் காட்டுப்பன்றிகளை உணவுக்காக வேட்டையாடுகின்றனர். காட்டுப்பன்றி மிகுந்த மன வலிமையையும், தறுகண்மையும் உடையது என்பதை சங்க நூல்கள் கூறுகின்றன. பன்றி இரண்டு வகையாகக் காண முடிகிறது. 1. காட்டுப் பன்றி, 2. ஊர்ப்பன்றி சங்க இலக்கியத்தில் காட்டுப்பன்றிகளே பேசப்பட்டுள்ளன. பன்றிகள் குறிஞ்சி நிலத்திற்கு உரியது. அதனுடைய சிறப்புப் பற்றி இங்கு ஆராயப்படுகிறது.

**காட்டுப்பன்றியின் சிறப்புகள்**

காட்டுப்பன்றிகள் கருமைநிறம் கொண்டவை. இருளைத் துண்டுத்துண்டாக வெட்டியதைப் போலக் காட்டுப்பன்றிகள் கருநிறத்தில் இருந்ததாகக் கீழ்காணும் பாடல்வழி கூறுகிறது. இதனை,

**“இருள் துணிந்து அன்ன ஏனம்”** (பாலசுப்பிரமணியன், கு. வெ. பத்துப்பாட்டு, இரண்டாம் பகுதி, மூலமும் உரையும், ப. 433, பா.எண். 243)

கருமைநிறம் கொண்ட காட்டுப்பன்றிகளைச் சங்க காலத்தில் பொன்னை

உரசிப்பார்த்து மாற்று அறிய உதவிய கருமைநிறக் கட்டளைக் கல்லுடன் ஒப்பிட்டுள்ளனர்.

**"நான் பொன் அன்ன புனிறு தீர் ஏனல்**

**கட்டளை அன்ன கேழல் மாந்தும்"** (நாராயண வேலுப்பிள்ளை, எம், ஐங்குறுநூறு, ப. 171, பா.எண். 263 , 1- 2)

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது. பொன் போன்ற தினைகள் முதிர்ந்திருந்த தோட்டத்தில் காட்டுப்பன்றிகள் மேய்ந்த போது அவற்றின் உடலின் மேல் ஒட்டியிருந்த தினைகளின் தோற்றமானது, பொன்னை உரசிப் பார்த்த கருநிறக் கட்டளைக் கல்லின் மேல் இருந்த பொன்னின் துகள்களைப் போலத் தோன்றியதாக பதிவுச் செய்துள்ளன. மேலும், இதே போன்ற உவமை விளக்கத்தினை அகநானூற்றுப் பாடலிலும் காணலாம். இதனை,

**"பொன் உரை கட்டளை கடுப்பக்காண்வர**

**கிளை அமல் சிறுதிணை விளைகுரல்**

**மேய்ந்து"** (வேங்கடசாமி நாட்டார், ந.மு. அகம். ப. 283, பா. எண். 248. 2-3)

என்ற பாடலடிகள் வழி அறிய முடிகிறது.

**தாய் – குட்டியின் பாச வலிமை**

விலங்குகள் குட்டிகளை பராமரித்து வளர்ப்பது மட்டுமின்றி, விலங்குகளிடையே உள்ள தாயின் பாச வலிமையை உணர்த்தும் வகையில் வெளிப்படும் முக்கிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன. கழுத்தில் தளர்ந்த மயிர் உடைய செந்நாய், பன்றிக் குட்டியைப் பிடிப்பதற்குப் பதிலாகத் தாய் பன்றியைக் கடந்து செல்கிறது என்பதனை,

**"கவிழ்மயிர் எருத்தின் செந்நாய் ஏற்றை**

**குருளைப் பன்றி கொள்ளாது கழியும்"** (நாராயண வேலுப்பிள்ளை, எம், ஐங்குறுநூறு, ப. 249, பா.எண். 397)

என்ற பாடல் அடிகள் மூலம் அறியப்படுகிறது. இதன் மூலம் தாய்ப் பன்றிக்கு பயந்து செந்நாய் கடந்து செல்லும் பதிவை அறிய முடிகிறது. மேலும், வேட்டுவர்கள் பன்றி வேட்டைக்குச் செல்லும் போது நாய்கள், பன்றிகளை வெருட்டின. அப்போது ஓர் ஆண் பன்றியானது வலிமையுடைய அவ்வேட்டைநாய்களை எதிர்த்து ஓட்டியது. தன் இனத்தை நெருங்குதலைத் தடுத்து வலியமைத்த தன் குட்டிகளைத் தழுவிக் கெண்டே தொங்கும் முலையினையுடைய தன் பெண் பன்றி செல்லுமாறும் பேணி நின்றது. அதன்பின் காட்டினின்றும் வெளிவந்து அரிய பொந்தாகிய ஒரு முடுக்கிலே வேட்டையாடும்

ஆட்களை எதிர்ப்பதற்காகவும் வந்து நின்றது. குடும்பச் சூழலில் ஆண்கள் தன்னுடைய குடும்பத்தைப் பாதுகாப்புச் செய்வது போல, விலங்கின் வகையில் ஆண்பன்றியிடம் உள்ள தாய்மைப் பண்பு புலப்படுத்தும் நுட்பமான வாழ்வியல் செய்தி பதிவாகியுள்ளது. மேலும், இதே செய்தியை மெய்ப்பிக்கும் விதமாக,

**“வயநாய் எறிந்த வன்பறழ் தழீஇ**

**இளையர் செய்துதன் மடக்கிக் கிளையொடு**

**……………………………………………..**

**……………………………………………..**

**தறுகட் பன்றி நோக்கிக் கானவன்”** (வேங்கடசாமி நாட்டார், ந.மு. அகம். ப. 283, பா. எண். 248. 2-6)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். வேட்டையாடும் நாயையும், கானவரையும் எதிர்த்து வீரத்துடன் செல்லும் பெண் பன்றி பதிவாகியுள்ளது. இதிலிருந்து செல்லும் பெண் பன்றிக்குட்டிகளை மற்ற விலங்குகளிடம் இருந்து பாதுகாத்து அதன் குட்டிகளுடன் இருக்கும் போது எச்சரிக்கையாக இருப்பதோடு நிறைய நேரம் செலவிடுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளன.

**காட்டுப்பன்றிகளின் ஒற்றுமை உறவு**

ஈச்சமரம் முதலிய குறுமரங்கள் புதர்களாக உள்ள காடுகளில் காட்டுப்பன்றிகள் நிறையக் காணப்படும். கேழல் என்ற பெயர் பரவலாகப் பயன்படுத்தப்பட்டாலும், புருவைப் பன்றி என்றும் காட்டுப்பன்றியை அழைத்தனர்.

காட்டுப்பன்றி பல குட்டிகளை ஈனும் சக்தி விரைவில் காட்டில் பல்கிப் போய் விடுகின்றது. காட்டுப்பன்றிகள் கூட்டமாகவே காணப்படும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அகநானூற்றில் பதிவாகியுள்ளதை,

**“சிறுகட் பன்றி பெருநிரை கடிய**

**முதைப் புனம் காவலர்**

**நினைத்திருந்து ஊதும்”** **( மேலது. ப. 219, பா.எண். 94 – 9 -12)**

என்ற பாடல் வழி அறியலாம். தன் இனத்தோடு காணப்படும் பன்றியின் தாய்மை வெளிப்படுவதை அறிய முடிகிறது. மேலும், தாயை இழந்த பன்றிக்குட்டி, வரிக் கோடுகளை உடைய பன்றிக்குட்டி மலையில் வளமாக விளைந்திருக்கும் சிறுதினைக் கதிர்களை உண்டு கானவர் வாழும் மலைமுகடுகளில் உறங்கும். இதனை,

**“தாஅய் இழந்த தழுவரி குருளையொடு**

**வளமலைச் சிறுதினை யுணீஇய கானவர்**

**வரையோங்கு உயர்சிமைக் கேழல் உறங்கும்” (நாராயண வேலுப்பிள்ளை, எம், ஐங்குறுநூறு, ப. 173, பா.எண். 268 - 1- 3)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. தாய்ப்பன்றி இறந்த போதும் பிறப் பன்றிகள் தாயை இழந்த குட்டிகளை வளர்த்துள்ள தாய்மைப் பண்பை அறிய முடிகிறது. இதன் மூலம் சங்கப் புலவர்கள் விலங்குகளைக் குறித்து தெளிவான நுட்பமுடன் ஆராய்ந்து பன்றியின் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் காணப்படக் கூடிய விலங்குகளின் பல்வேறு விதமான குணங்கள், காட்டுப்பன்றிகளின் சிறப்புகள், தாய்க்குட்டிகளின் பாசவலிமையில் தாய்மைப் பாதுகாப்புச் செய்யும் முறைகள், பன்றிகளின் ஒற்றுமை உறவுமுறை விலங்கின் குறிப்பிட்ட பண்புகளைக் கண்டறிந்து தமிழரின் பண்பாட்டுக் கூறுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மனித மனத்தோடு விலங்கினக் கூறுகள் மணம் வீசுவதைக் காணுவதோடு விலங்குகளின் தாய்மைப் பற்று அனைத்தையும் விளக்கப்பட்டுள்ளன. தாய்மைப் பயன் பற்றி இக்கட்டுரை மூலமாக கண்டறிந்து கூறப்பட்டுள்ளன.

**துணை நூற்பட்டியல்**

1. அகநானூறு, களிற்றுயானை நிரை, வேங்கடசாமி நாட்டார், வேங்கடாசலம் பிள்ளை, ரா. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி – 6, 1962
2. ஐங்குறுநூறு, நாராயண வேலுப்பிள்ளை, எம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், சென்னை – 98
3. பத்துப்பாட்டு, இரண்டாம் பகுதி (மூலமும் உரையும்), பாலசுப்பிரமணியன், கு. வெ., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவெட் லிமிடெட், சென்னை – 98, முதற்பதிப்பு ஏப்ரல் – 2004
4. தொல்காப்பியம், பொருளதிகாரம் மூலமும் உரையும், திருஞானசம்பந்தம், ச. கதிர் பதிப்பகம், 93 தெற்கு வீதி, திருவையாறு – 613 204

**Bibliography**

1. Sspillai,Ra.Tirunelveli South Indian Saiva Siddanta Printing Association Tirunelveli south Indian saiva siddanta printing association tirunelveli-6 1962.

2. Aikurunuru, Narayana velupillai, M. New Century Book house PVT Ltd, Chennai-98.
3. Ten Idylls, volume II (source and text by) Balasubramanian, K.V., New Century Book house PVT Ltd, Chennai-98, First Edition April-2004
4. Tolkappaiyam porulatikaram (source and Text) Tirunnasambandam.S New Century Book house PVT Ltd, Chennai-a, Kathir pubilishing House, 93,South Road, Thiruvaiyaru-613 204.


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**சுமித்ரா.ரா, மோகன்காந்தி. க, "எட்டுத்தொகை அகப்பாடல்களில் பன்றியின் தாய்மைப்பண்பு"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 6, இதழ் 1, சனவரி 2026, பக். 1-7

**Cite this Article in English**

**Sumithra.R, Mohan Gandhi. G, "The Motherly Attribute of the Pig in the Octave Internal Songs"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.6 Issue 1, January 2026, pp. 1-7

# மருத நிலத்தின் இருவேறான சிறைப்புறச் சூழல்

## Marudha Nilathin Iruverana Siraippura Chuzhal

**திலகவதி. அ, சிவபாலன். ம**

தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

கோயம்புத்தூர்- 641 006

**Thilagavathi.A, Sivabalan.M**,

Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science,

Coimbatore – 641 006

ORCiD: https://orcid.org/0000-0002-3976-7706

**DOI: 10.5281/zenodo.18382982**

**Abstract**

Even in the Marutham region, where promiscuity was widely discussed, an environment conducive to clandestine love affairs existed. This article explains, based on the concept of 'concealment becoming chastity' the circumstances under which the hero engages in extramarital affairs due to various factors such as conception, childbirth, wealth, and prosperity.

**ஆய்வு சுருக்கம்**

பரத்தமை ஒழுக்கம் வெகுவாகப் பேசப்படும் மருத நிலத்திலும் களவிற்கான சூழல் நிலவியது. அக்களவு கற்பாக மாறும்பொழுது கருவுறுதல், மகப்பேறு, செல்வம், செழுமை போன்ற பல காரணங்களால் தலைவன் பரத்தமை ஒழுக்கம் கொள்ளும் சூழலைக் சிறைப்புறக் கூற்றின் அடிப்படையில் இக்கட்டுரை விளக்குகின்றது.

**Keywords:** Sangam Literature, Siraipuram, Thozhi, Marudham, Tholkapiyam, Sivabalan

### முன்னுரை

நாடோடியாக வாழ்ந்து கொண்டிருந்த மனித குலம் மருத நிலத்தில் பண்பட்ட நிலையின் உச்சத்தை அடைந்தது. வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தின் சிறுபொழுதாக வைகறையும் உரிப்பொருளாக ஊடலும் அமைகின்றது. தலைவன் மேற்கொண்ட பரத்தமை ஒழுக்கம் ஊடலுக்கான காரணம் ஆகின்றது.

**மருதத் திணை சிறைப்புறப் பாடல்கள்**

சிறைப்புறக் கூற்றின் அடிப்படையில் மருதத் திணைப் பாடல்களை அணுகும் பொழுது களவு, கற்பு என்ற இரு நிலைகளைக் காண முடிகின்றது. களவு சார்ந்த பாடல்கள் நான்கும் [நற்றிணை - 1 (60), குறுந்தொகை - 2 (89, 393), ஐங்குறுநூறு (93)] கற்பு சார்ந்த பாடல்கள் நான்கும் [கலித்தொகை - 4 (80, 82, 83, 85)] ஆக எட்டுப் பாடல்கள் மட்டுமே சிறைப்புறப் பாடல்களாகக் காணப்படுகின்றன.

பரத்தமை ஒழுக்கம்

காதல் உணர்வு என்பது எல்லா மக்களிடத்தும் இயல்பாய்த் தோன்றக் கூடிய ஒரு மெல்லிய பாலின ஈர்ப்பாகக் கொள்ளலாம். காதலுக்கான சூழல் மக்கள் வாழும் சூழலுக்கேற்ப மாறுபடுமே அன்றிக் காதல் உணர்வு மாறுபடுவதில்லை. தலைவன் திருமணத்துக்குப் பின் தலைவியின் மகப்பேறு காலத்தில் பரத்தையரை நாடிச் செல்கிறான்.

“தலைவனுடைய பாலியல் தேவையை நிறைவு செய்பவளாகவும் சமூகப் பாதுகாப்பு ஏதும் இல்லாதவளாகவும் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற தலைவிக்குண்டான கட்டுப்பாடுகள் ஏதும் இல்லாதவளாகவும் விளங்குகிறாள்” எனப் பரத்தையர் ஒழுக்கம் பற்றி ஜெ.அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

கற்பு நெறிக்குட்பட்ட காதல், வரைவு, குழந்தேப்பேறு ஆகிய நிலைகளைக் கடந்தவர்களாகவும் பரத்தையர், பொதுமகளிர், பொருட்பெண்டிர், வரைவின் மகளிர், தேவரடியாள், விலைமகள், கணிகை, வேசி, தாசி எனப் பல்வேறு பெயர்களால் அடையளப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் தலைவனின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்து தங்களுக்கான பொருளாதாரத்தைப் பெற்றுக் கொண்டனர்.

**சிறைப்புறச் சூழல்**

களவு நிலையிலும் கற்பு நிலையிலும் தலைவி வீட்டில் இருக்கும்பொழுது அவளது நிலைப்பாடுகளைத் தலைவி, தோழி, செவிலி முதலானோரின் கூற்றாகத் தலைவன் வேலிக்குப் புறத்தே நின்று அறிவது சிறைப்புறச் சூழல் ஆகும்.

**களவு நிலையில் சிறைப்புறச் சூழல்கள்**

தலைவியின் மாறுபட்ட செயல்பாடுகள், பருவ வளர்ச்சி அடைதல், ஊராரின் அலர் பேச்சு அறிந்த நிலை, வினை முடிவுற்ற போன்ற காரணங்களால் தலைவியை வீட்டில் வைத்துக் காவல் காப்பது இற்செறித்தல் எனப்படும். இது களவு வாழ்வின் முக்கிய அங்கமாக உரைக்கப்படுகின்றது. இந்நிலையில் தலைவன் சிறைப்புறத்தானாக இருந்து தலைவி நிலை அறிகின்றான். தலைவியின் களவொழுக்கம் அறிந்து ஊரார் அலர் தூற்றுவதை வள்ளுவரும் பதிவு செய்துள்ளார்.

**கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேற்**

**றவ்வென்னுந் தன்மை யிழந்து** திருக்குறள் 1144

1. உழவனுக்குச் சொல்வதாகக் கூறுவது
2. வள்ளைப்பாட்டின் ஊடே தலைவனுக்கு அல்லது பாங்கனுக்கு உரைப்பது
3. தலைமக்களுக்கான காதல் அழகு போன்றவற்றைச் செவிலியிடம் கூறுவது

**சான்று**

தலைவன் சிறைப்புறமாக நிற்பதை அறிந்து கொண்ட தோழி தலைவியின் இற்செறிப்பினை உழவர்க்கு ஆணையிடுவது போல தலைவனிடம் உணர்த்துகிறாள். உழவரிடம் கழனியில் இருக்கும் மலர்களைத் தலைவிக்காகப் பறித்து வா என்று சொல்கையில் அவள் வீட்டை விட்டு வெளியேற இயலா நிலையில் இருப்பதை மிகவும் நுட்பமாக வெளிப்படுத்துகின்றாள்.

**சாயும் நெய்தலும் ஓம்புமதி; எம்மில்**

**மாஇருங் கூந்தல் மடந்தை**

**ஆய்வளைக் கூட்டும் அணியுமார் அவையே** நற்றிணை 60, 8 - 10

உயர்ந்த பல நெற்கூடுகளை ஒருங்கே கட்டி வைத்திருக்கும் தலைவி வீட்டாரின் பொருட்டு எருமையை ஓட்டியபடி உழுதற்குச் செல்லும் உழவனே! இரவெல்லாம் உறங்காது விடியற்பொழுதில் கருங்கண்களை உடைய வராஅலின் பெரிய ஊன் துண்டுகளோடு சமைத்த சோற்றுத் திரளைகளை விருப்பத்தோடு உண்டு, நீர் மிகுந்த வயற்புறங்களில் நாற்றுமுடிகளை நடுதற்காக உழத்தியரோடு சென்றால் அங்குள்ள கோரைகளையும் நெய்தல் பூக்களையும் களைந்து எறியாது கொண்டு வருவாயாக. அவை எம் இல்லத்தினுள் உள்ள கருங்கூந்தல் உடைய தலைவிக்கு அழகிய வளைகளாகவும் உடுத்தும் ஆடையாகவும் அணிதற்கு உரியனவாகும்.

சிறைப்புறக் கூற்றுகளில் செவிலியிடம் தோழி உரைக்கும் முதல் பாடலாக ஐங்குறுநூற்றுப் பாடல் அமைகின்றது.

**செய்த வினைய, மன்ற பல் பொழில்**

**தாது உண் வெறுக்கைய ஆகி, இவள்**

**போது அவிழ் முச்சி ஊதும் வண்டே** ஐங்குறுநூறு 93, 3 - 5

தலைவியின் மெய் வேறுபாட்டை உணர்ந்த செவிலி இயல்பு நிலைக்கு மாறாகத் தலைவியின் உச்சிக் கொண்டையில் வண்டுகள் மொய்ப்பதற்கான காரணத்தை தோழியிடம் வினவுகிறாள். வயல்வெளிகளில் மலர்ந்திருந்த ஆம்பல், செங்கருங்காலிப் பூக்கள் போன்றவற்றை எருமைக் கடாக்கள் உண்டதால் மலர்களில் தேனை உண்டு

வாழும் வண்டினங்கள் தலைவியின் கூந்தலில் மொய்க்கின்றன என்கிறாள் தோழி.

எருமை கடாக்கள் பூக்களை உண்டன என்பதன் வாயிலாகத் தலைமக்கள் முயக்கத்தையும் வண்டினங்கள் தலைவி கூந்தலை மொய்க்கின்றன என்பதன் மூலம் ஊரார் அவர்களது களவொழுக்கம் பற்றிப் பேசும் பழிச் சொற்களையும் மறைவாக நின்று கேட்கும் தலைவன் உணரும் வகையில் மதிநுட்பத்தோடு உணர்த்துகின்றாள் தோழி.

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தன்னிடம் சொல்பவளாகச் சொன்னதாக இக்குறுந்தொகைப் பாடல் வந்துள்ளது. தலைவன் பெயரை வள்ளைப்பாட்டில் வைத்துப் பாடிக் கொண்டு உரலில் நெல்லை உலக்கையால் தலைவி குற்றிக் கொண்டிருக்கிறாள். (உரலில் நெல் முதலான தானியங்களை இட்டு உலக்கையால் இடிக்கும்பொழுது சோர்வு தோன்றாதிருக்க பெண்கள் பாடுவது வள்ளைப் பாட்டு ஆகும்)

**பாவடி உரல பகுவாய் வள்ளை**
**ஏதின் மாக்கள் நுவறலும் நுவல்ப**
**அழிவ தெவன்கொலிப் பேதை யூர்க்கே**
**பெரும்பூண் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்**
**கருங்கண் தெய்வம் குடவரை யெழுதிய**
**நல்லியற் பாவை அன்னஇம்**
**மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே** குறுந்தொகை 89

தலைவன் ஓரிடத்தில் தலைவன் மறைவாக நின்றுகொண்டிருப்பதை உணர்ந்த தோழி, “தலைவி தலைவனைப் பற்றிப் பாடினால், இவ்வூர் மக்கள் இவளைப் பற்றி அலர் தூற்றினாலும் நாங்கள் வருந்த மாட்டோம்” என்றாள். தான் சொன்னது தலைவனுக்குக் கேட்டால் விரைவாக திருமண ஏற்பாடுகள் செய்வான் என்று நினைத்த தோழி இதை உரைப்பதாகக் கொள்ளலாம்.

**கற்பு நிலையில் சிறைப்புறச் சூழல்கள்**

களவில் தலைவியோடு கூடி இன்புற்ற தலைவன் பின்னாளில் தன் இயல்பு நிலையிலிருந்து மாறுகிறான். தலைவி கருவுறுதல், பிள்ளைப்பேறு என தோற்றத்தில் மாறுதல், தலைவனிடம் செல்விச் செழிப்பு மிகுதியாதல் போன்ற காரணங்களால் தலைவன் பரத்தமை ஒழுக்கத்தை மேற்கொள்கிறான். இதனை வள்ளுவப் பெருந்தகை பொருட்பெண்டிர் எனப்படும் பொதுமகளிர் உறவு இருளில் பிணத்தோடு கூடுவது போல் எனக் குறிப்பிடுகின்றார்.

**பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்**
**ஏதில் பிணம்தழீஇ அற்று** திருக்குறள் - 913

1. மகனின் செயல்பாடுகளையும் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தையும் ஒப்பிட்டு மகனிடம் கூறுவது

2. மகனோடு கோவிலுக்குச் சென்று திரும்பிய தோழியிடம் தலைவி கேள்விகளைக் கேட்பது

3. மகனின் தோற்றப் பொலிவின் வழியாக மருத நிலத்தின் செல்வச் செழுமை, அதனால் தலைவன் மேற்கொண்ட பரத்தமை ஒழுக்கத்தின் தன்மைகளையும் ஒப்பிட்டுக் கூறுவது

**சான்று**

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் சிறைப்புறத்தானாக, தலைவி தன் மகனிடம் பேசுவது போல் தலைவனுக்கு உரைத்த செய்தியை மருதக்கலிப் பாடல் பேசுகின்றது.

**ஐய! எம் காதில் கனங் குழை வாங்கி, பெயர்தொறும்,**
**போது இல் வறுங் கூந்தல், கொள்வதை, நின்னை யாம்**
**ஏதிலார் கண் சாய நுந்தை வியல் மார்பில்**
**தாது தேர் வண்டின் கிளை பட, தைஇய**
**கோதை பரிபு ஆட காண்கும் கலித்தொகை 80, 22 - 26**

நான் உனக்கு நிலவைக் காட்டி மகிழ்ந்திருக்கும் வேளையில் உன் தந்தை எனக்கு அளி செய்யாமல் புறத்தே ஒருத்தியிடம் மாறுபட்டிருப்பது எனக்குத் துன்பம் தருகிறது. என் காதணிகளைக் கழற்றிக் கொண்டு அவளிடம் தருவதற்கு மீண்டும் செல்லாமல் இருக்க உன்னை என் தோள்களில் ஏந்திக் கொள்வேன். நீ உன் தந்தையோடு மகிழ்ந்திருப்பாய். உன் மீது கொண்ட அன்பால் அவர் பிற பெண்களை நாடாதிருப்பார் என்று மகனிடம் உரைப்பது போல் தலைவி மறைவாக நிற்கும் தலைவனிடம் கூறுகிறாள்.

தோழியோடு சென்ற தன் மகன் நெடுநேரம் ஆகியும் வீடு திரும்பாததால் கவலையாக இருந்த தோழி அவர்களைக் கண்டதும் பதட்டமாகப் பல வினாக்கள் கேட்க தோழி மறுமொழி தருகிறாள்.

**மடக் குறு மாக்களோடு ஓரை அயரும்**
**அடக்கம் இல் போழ்தின்கண், தந்தை காமுற்ற**
**தொடக்கத்துத் தாயுழைப் புக்காற்கு, அவளும்**
**மருப்புப் பூண் கையுறையாக அணிந்து,**
**'பெருமான், நகைமுகம் காட்டு!' என்பாள் கண்ணீர்**
**சொரி முத்தம் காழ் சோர்வ போன்றன; மற்றும்,**

**வழிமுறைத் தாயுழைப் புக்காற்கு, அவளும்**
**மயங்கு நோய் தாங்கி, மகன் எதிர் வந்து,**
**முயங்கினள் முத்தினள் நோக்கி, நினைந்தே,**
**'நினக்கு யாம் யாரேம் ஆகுதும்?' என்று,**
**வனப்பு உறக் கொள்வன நாடி அணிந்தனள்,**
**ஆங்கே, 'அரி மதர் உண்கண் பசப்ப நோய் செய்யும்**
**பெருமான் பரத்தைமை ஒவ்வாதி' என்றாள் கலித்தொகை 82, 11 - 23**

“சிறுவயதில் தலைவனோடு ஓரை விளையாடிக் களித்து விரும்பிய பெண்ணையும் முறைத் தாயான மற்றொருத்தியையும் இப்போது புதிதாக உறவில் உள்ள ஒருத்தியையும் கண்டோம். அவர்களும் உன்னைப் போலவே கலக்கத்தோடு காணப்பட்டனர். முதலாமவள் மாலை அணிவித்து உன் மகனை சிரிக்க சொல்லிக் கண்ணீர் சிந்தினாள். முறைத்தாய் நான் யார் உனக்கு என்று கேட்டு அணிகலன்கள் அணிவித்து மகிழ்ந்து உன் தந்தையைப் போல் நீ பரத்தை ஒழுக்கம் மேற்கொள்ளாதே என்றாள். பின் தலைவனோடு தற்போது உறவில் இருக்கும் புதியவளிடம் சென்றான்” எனத் தோழி பதில் உரைக்கிறாள்.

**முடிவுரை**

களவு, கற்பு ஆகிய இரு நிலைகளில் மருத நிலத்திற்கான சிறைப்புறச் சூழல்கள் தோன்றுகின்றன. களவுச் சூழலில் தலைமக்களின் வரைவை விரைவுபடுத்தும் நோக்கமும் கற்புச் சூழலில் தலைவன் மேற்கொள்ளும் பரத்தமை ஒழுக்கத்தைச் சுட்டிக் காட்டும் நோக்கமும் வெளிப்படுகின்றது. மருத நிலத்தின் செல்வச் செழுமையும் தலைவியின் மாதவிடாய் காலமும் மகப்பேறு காலமும் தலைவன் பரத்தையரை நாடுவதற்கான காரணிகளாக அமைகின்றன. களவில் கூடி மகிழ்ந்த பெண்ணையே திருமணம் செய்து கொண்டு நெறியான வாழ்வை வாழ்ந்தவனாகவும் பின் பரத்தமை ஒழுக்கம் மேற்னொண்டவனாகவும் தலைவன் கட்டமைக்கப்பட்டுள்ளான். கணவனையே நினைத்து நெறி தவறாது வாழக் கூடியவளாக தந்தையை ஒத்த மகனின் செயல்பாடுகளைக் கண்டு மகிழும் அதே சமயத்தில் வருத்தம் கொள்ளும் முரண்பாட்டு குணம் உடையவளாகவும் தலைவி காண்பிக்கப்பட்டுள்ளாள். சங்க கால மருத நிலத்தின் பெண்கள் ஆண்களின் உடலியல் தேவைகளை நிறைவு செய்பவர்களாகவும் குடும்ப பொறுப்புகளைச் சிறப்புற மேற்கொள்பவர்களாகவும் விளங்கினர். ஆண்கள் பொருள் ஈட்டுதல், தங்கள் எண்ணப்படி வாழ்தல் என்ற நிலையில் வாழ்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

**துணைநூற் பட்டியல்**

1. இளம்பூரணர் (உரையாசிரியர்), தொல்காப்பியம் (எழுத்து,சொல்,பொருள்), ஏப்ரல் 2010, சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை – 600 014

2. பேரா.முனைவர் பாக்கியமேரி, வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு(செம்மை மற்றும் விரிவுப் பதிப்பு), முதற் பதிப்பு 2014, பூவேந்தன் பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை - 600 004

3. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு, சென்னை – 600 104

4. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், கௌரா பதிப்பகம் நாராயணா கிருஷ்ணராஜ புரம், திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

5. கலைஞர் உரை, திருக்குறள், பதிமூன்றாம் பதிப்பு -2013, திருமகள் நிலையம், சென்னை – 600 017

6. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 104

7. முனைவர் பா.கவிதா (பதிப்பாசிரியர்), சங்க இலக்கியத்தில் இனவரைவியல், 2023, மசிவன் பதிப்பகம், 111/199 ஆ. கூடலூர், விழுப்புரம் – 605 755

8. மயிலை சீனி வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்ககாலம்), ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை – 600 017

9. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பாரி நிலையம், 184 பிராட்வே, சென்னை – 600 108

10. அ.திலகவதி மற்றும் முனைவர் ம.சிவபாலன். “பெரும்பாணாற்றுப்படையில் பயணக் கூறுகள்: Travel Components in Perumpanatruppadai”. PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol.3, No.3, July 2023, Pages, 10-21, https://pulamejournal.com/index.php/pulam/article/view/137. DOI: 10.5281/zenodo.8109846

11. A.Thilagavathi, and Dr Sivabalan M. “சிறுபாணாற்றுப்படையில் பயணக் கூறுகள்: Travel Components in Cirupanatruppadai”. PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol.3, No.2, Apr. 2023, Pages, 27-34, https://pulamejournal.com/index.php/pulam/article/view/127. DOI: 10.5281/zenodo.7879864

**Refences**

1. Ilampuranar (Editor), Tolkappiyam (Letter,Word,Meaning), April 2010, Sharatha Publishing House, Rayapetta, Chennai - 600 014.

2. Pera.Munavar Bhakyamery, A History of Tamil Literature Towards Diversity (Refined and Expanded Edition), First Edition 2014, Bhuventhan Publishing House, Mylapore, Chennai - 600 004

3. S.V.Subramanian, Sanga Literature Patupattu Source and Exposition, Manivasakar

Publishing House, Fifth Edition, Chennai - 600 104

4. Puliyurkesikan, Silappathikaram Source and Text, Gaura Publishing House Narayana Krishnaraja Puram, Tiruvallikeni, Chennai – 600 005
5. Artist's Text, Thirukkural, Thirteenth Edition - 2013, Thirumal Sadiyam, Chennai – 600 017
6. S.V.Subramanian, Sangha Literature Octopus, Manivasakar Publishing House, Chennai – 600 104
7. Dr.B.Kavitha (Editor), Ethnography in Sangha Literature, 2023, Masivan Publishing House, 111/199 b. Kudalur, Villupuram - 605 755
8. Mailai Seeni Venkatasamy, Ancient Tamil Commerce (Sangakalam), Sri Senpaha Publishing House Chennai – 600 017
9. M. Varatharasan, Nature in Palanthamil Literature, Pari Station, 184 Broadway, Chennai - 600 108
10. A. Thilakavathy, and Dr. M. Sivapalan. "Travel Components in Perumpanatruppadai". PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol. 3, No. 3, July 2023, 10-21, https://pulamejournal.com/index.php/pulam/article/view/137. DOI: 10.5281/zenodo.8109846
11. A.Thilagavathi, and Dr Sivabalan M. "Travel Components in Cirupanatruppadai". PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol. 3, No. 2, Apr. 2023, 27-34, https://pulamejournal.com/index.php/pulam/article/view/127 DOI: 10.5281/zenodo.7879864

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**திலகவதி. அ, சிவபாலன். ம, "மருத நிலத்தின் இருவேறான சிறைப்புறச் சூழல்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 6, இதழ் 1, சனவரி 2026, பக். 8-15

**Cite this Article in English**

**Thilagavathi.A, Sivabalan.M, "Marudha Nilathin Iruverana Siraippura Chuzhal"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.6 Issue 1, January 2026, pp. 8-15

# கொல்லிமலை மலையாளி இனமக்களின் வாழ்வியல் நிலைப்பாடு

# Kollimalai Malaiyali Inamakkalin Vazhviyal Nilaippadu

**தென்னரசு. கி,** தமிழ்த்துறை, கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர் – 641407

**Thennarasu. K**, Department of Tamil, KPR College of Arts Science and Research, Coimbatore - 641407.

ORCiD: https://orcid.org/0009-0002-8238-3545

**DOI: 10.5281/zenodo.18383013**

## Abstract

Sociologists believe that human society evolved from a tribal system. Historical studies reveal that ancient people lived in clans. In the early period, some people settled and lived in forest areas. Since the food they needed was available there, they adapted their way of life accordingly. Moreover, they developed their own systems for housing, food, administration, agriculture, occupations, and worship. As time passed, due to the influence of the lifestyle and practices of the people living in the plains, their living conditions gradually changed.

## ஆய்வுச்சுருக்கம்

மனித சமுதாயம் பழங்குடி அமைப்பிலிருந்து வளர்ந்து வந்தது என்பதுதான் சமூகவியலறிஞர்களின் கருத்து. வரலாற்றின் அடிப்படையில் ஆய்கின்ற போது பண்டையக் கால மக்கள் இனக்குழுக்களாக வாழ்ந்து வந்தது புலனாகிறது. ஆரம்ப காலகட்டத்தில் சில மக்கள் வனப்பகுதிகளில் குடியேறி வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் வனப்பகுதிகளில் கிடைப்பதால், தங்களின் வாழ்க்கை மாற்றியமைத்து கொண்டனர். அதுமட்டுமல்லாமல் வீடுகளில் அமைப்பு, உணவு, நிர்வாக முறை, விவசாயம், தொழில், வழிபாடு என அனைத்தும் தங்களுக்கென்று தனியாகக் கட்டமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். காலங்கள் மாறி வருகின்ற பொழுது சமவெளி பகுதியின் மக்களின் பழக்கத்தால் வாழ்க்கை நிலையும் மாற்றமடைகின்றதைக் காணமுடிகிறது.

**Keywords:** பழங்குடி, இனக்குழு, வீடு, உணவு, தொழில், விவசாயம், வழிபாடு

## முன்னுரை

மற்ற மாவட்டங்கள் போலவே நாமக்கல் மாவட்டத்தில் பழங்குடி இனமக்கள்

வசித்து வருகின்றனர். இம்மாவட்டத்தில் சேந்தமங்கலம், கரியாம்பட்டி, முள்ளுக்குறிச்சி, ஆயில்பட்டி, நாரைக்கிணறு, நடுக்கோம்பை, கொல்லிமலை ஆகிய இடங்களில் மலையாளி இனமக்களின் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் நாமக்கல் மட்டுமின்றி சேலம், வடஆற்காடு, தென்ஆற்காடு, தருமபுரி ஆகிய இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். பழங்குடி மக்களின் வாழ்வியலும் வரலாற்றையும் அறியும் நோக்கில் பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் கொல்லிமலை மலையாளி இனமக்களின் வாழ்வியலை ஆராயப்பட்டுள்ளது.

**கொல்லிமலையின் அறிமுகமும் பெயர்க்காரணமும்**

இயற்கை வளமிக்க கொல்லிமலை இந்தியாவின் தெற்கு மாநிலங்களான தமிழ்நாட்டில் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. கொல்லிமலை கிழக்குத் தொடர்ச்சி மலையின் இறுதியில் அமைந்துள்ளது. நாமக்கல் மாவட்டத்திலிருந்து 55 கி.மீ தொலைவிலும் கடல் மட்டத்திலிருந்து 1000 முதல் 1600 மீட்டர் உயரமும் இம்மலை அமைந்துள்ளது. கொல்லிமலைக்கு நாமக்கல், சேலம், சேந்தமங்கலம், இராசிபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து அரசு, தனியார் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

கொல்லிப்பாவை என்னும் காவல் தெய்வம் இருக்கும் மலை என்பதால் கொல்லிமலை என்னும் பெயர் வந்ததாக அறியப்படுகின்றது. இயற்கை அழகு நிறைந்திருக்கும் மலையில் தேவர்கள், முனிவர்கள் தவம் மேற்கொண்டு வந்தனர். அவர்களின் தவத்தைக் கெடுக்க நினைத்த அசுரர்களை அழிக்க தேவத்தச்சனால் உருவாக்கப்பட்டதே கொல்லிப்பாவை. அவ்வாறு உருவாக்கப்பட்ட கொல்லிப்பாவை குடியிருக்கும் இடம் என்பதால் கொல்லிமலை என்று பெயர் வந்ததென்று குறிப்பிடுவர்.

“கொல்லிமலையில் வந்து யாரேனும் தீமை செய்தாலோ அல்லது தீமை எண்ணத்தோடு வந்தாலோ இக்கொல்லிப்பாவை தனக்கே உரிய அழகில் தோன்றி மயக்கச் செய்தும் அல்லது அச்சுறுத்தியும் கொன்றுவிடும். அதோடுமட்டுமின்றி கோபத்தோடு சிரிக்கும் அச்சிரிப்பினைத் தாங்கும் ஆற்றல் இன்றி தீமை செய்தவர் இறந்து விடுவர். இதனை வலியுறுத்தும் திருவள்ளுவரும் ‘சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி’ என்று குறிப்பிடுகிறார். என்வே தீயவரை அழிக்கும் கொல்லிப்பாவை அமைந்திருக்கும் இடம் என்பதால் கொல்லிமலை என்று பெயர்வந்தது என்பர்”. (க. கணியன் பூங்குன்றனார், தமிழகப்பெருமைக்குக் கொல்லிமலையின் கொடை, முனைவர் பட்ட ஆய்வேடு ப.4)

**கொல்லிமலையின் வளம்**

கடையெழு வள்ளல்களில் ஒருவரான ஓரி ஆட்சி செய்த பகுதி கொல்லிமலையாகும். செல்வ செழிப்புமிக்க இயற்கையான பகுதிகளையும், எண்ணற்ற மூலிகை நிறைந்த தாவரங்களையும் விலங்கினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

சங்க இலக்கியத்தில்,

பல்பழப் பலவின் பயங்கெழுகொல்லி" (அகம் 208) என்று பரணரும்,

செவ்வேர் பலவன் பயங்கெழு கொல்லி" (அகம் 203) என்று கல்லாடனாரும் பாடியுள்ளார். பலாவைப் பற்றி கூறுவதோடு இல்லாமல் பரணர் கொல்லிமலையின் அடர்ந்த காடுகளையும், மயில் முதலான பறவைகளையும் மற்ற விலங்கினையும் பற்றிப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**மலையாளிகள் – பெயர்க்காரணம்**

பழங்குடி மக்களான மலையாளிகள் சுத்தத் தமிழைப் பேசும் மரபு உடைவர்கள். இவ்வினமக்கள் மலைப்பகுதியில் வாழ்ந்ததால் மலையாளிகள் எனப் பெயர் வந்தாக அறியமுடிகிறது. சில மக்கள் கொல்லிமலையின் ஆளுமைக்கு உரியவர் என்பதால் மலையாளி என்ற பெயர் வந்ததாகவும் குறிப்பிடுகின்றனர். மேலும் மலையாளிகள் மலை வெள்ளார், மலைக்காரர், மலைக்கவுண்டர், கவுண்டர் என்ற பெயர்களாக அழைக்கப்படுகின்றனர்.

**கொல்லிமலையின் நிலப்பரப்புகள்**

கொல்லிமலையின் ஊர்ப்பகுதிகள் சமவெளிப் பகுதியாகும், சாய்வான பகுதியாகவும் அமைந்துள்ளது. அவ்வூர்களில் எழுபது முதல் எண்பது வீடுகள் வரை அமைந்திருக்கும். ஒவ்வொரு ஊருக்கும் ஒரு ஊர்த்தலைவன் இருப்பார். அவரை ஊர்க்கவுண்டர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பொருளாதார அடிப்படையில் நோக்கில் பதவி வழங்கப்படுவதில்லை. பரம்பரை பரம்பரையாக ஒரே குடும்பத்திற்கு இப்பதவி வழங்கப்பட்டு வருகின்றது. அவர்கள் வழங்கும் தீர்ப்பிற்கு ஊர் பொதுமக்களும் கட்டுப்பட்டு வாழ்கின்றனர். ஊர்க்கவுண்டருக்கு உதவியாக கரைக்காரர் என்பவர் இருப்பார். ஊரில் நிகழ்வும் நன்மை தீமைகளை அவரிடம் கலந்தலோசித்து பிறகு முடிவு செய்வார். இம்மலையில் 14 நாடுகள் 273 சிற்றூர்கள் உள்ளன. இப்பதினான்கு ஊர்களுக்குத் தலைவனைப் பட்டக்காரர் என்று அழைக்கப்படுகின்றனர்.

**இசைக்கருவிகள்**

மனித வாழ்வு இசையில் தொடங்கி இசையில் முடிவடைகிறது. கொல்லிமலை மலையாள இனமக்களிடம் இசையும் நாடகமும் இயல்பாக தோன்றி வளர்ந்துள்ளன. மலையாளிகள் இசையின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாக உள்ளனர். இம்மக்கள் விழாக்கள் நடைபெறும் போது, அவர்கள் தாமே பல்வேறு கூத்துகளையும் நிகழ்த்துகின்றனர்; இசைக்கருவிகளும் இசைக்கப்படுகின்றனர். மலையாளி இனமக்கள் தப்பு, ஆர்மோனியம், பம்பை, உடுக்கை, புல்லாங்குழல், மகுடி, நாதஸ்வரம், சலங்கைப் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்துகின்றனர்.

### வீடுகளின் அமைப்பு

மலையாளி இனமக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வந்தனர். பெரும்பாலான வீடுகள் குடிசை வீடாகக் காணப்பட்டன. சுற்றுச்சுவர் முழுவதும் கற்களையும் மண்ணையும் வைத்து சுவர் அமைக்கப்பட்டிருக்கும். இன்னும் சில வீடுகள் மலைகளில் கிடைக்கும் செடிகளை வெட்டி, அதனை ஒருங்கே கையிறுகளால் கட்டி, வேலியைப் போன்று அமைத்து அதில் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். வீட்டின் மேற்பகுதி முழுவதும் மூங்கில், கடுக்காய் மரம், சவுக்கு மரம் ஆகிய மரங்களைக் கொண்டு கையிறுகள் மூலம் இருக கட்டி, கூரை வேய்வதற்கு மலைகளில் கிடைக்கும் புற்களைக் கொண்டு வேயப்படுகின்றன. மழை, வெயில் நேரங்களில் எப்பொழுதும் போல இயல்பாக இருக்கும்.

மனிதர்கள் தங்குவதற்கு அமைக்கப்பட்டிருக்கும் வீடுகளைப் போன்று ஆடு, மாடுகளுக்கு குடில் போன்று பகுதி அமைக்கப்படுகின்றன. நான்கு புறமும் பரண் போன்று அமைத்து அதன் மேல் மூங்கில் மரங்களில் இரண்டாகப் பிளந்து ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக வைத்து இருக கட்டப்படுகின்றன. ஆடுகள் மழைக்காலங்களில் நனையாமலிருக்க காட்டுப்பகுதியில் கிடைக்கும் புற்களைக் கொண்டு மேற்கூரைப் பகுதி முழுவதும் வேயப்படுகின்றது.

### குடும்ப அமைப்பு

குடும்பம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வும் வாழ்க்கையே இல்லற வாழ்க்கை ஆகும். இல்வாழ்க்கை வள்ளுவர் கூறுவது போல அன்பும் அறனும் உடையதாக இருக்கவேண்டும் என்பதை,

> **“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
> **பண்பும் பயனும் அது”   (திருக்குறள் 45)**

குறளின் வாயிலாக அறியமுடிகிறது.

கொல்லிமலையில் வாழும் மலையாளி இனமக்கள் உற்றார் உறவினரிடம் சேர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இணைந்து வாழ்வதற்கு சுற்றுச்சூழல் சாதகமாக இருப்பதை உணரமுடிகிறது. ஆனால் தற்காலத்தில் தனிக்குடும்பமாக மாறுவதற்கு தொழில் நுட்பங்களும் முக்கிய காரணமாக விளங்குகின்றது. தொழில் நுட்ப வளர்ச்சியால் மலையாளி இனமக்களின் கூட்டுக்குடும்ப வாழ்க்கை சிதைந்ததோடு, மக்கள் தொழிலுக்காக மலைப்பகுதியிலிருந்து வெளியேறி சமவெளிப் பகுதிகளில் குடியேறி தங்கள் வாழ்க்கையை மாற்றிமைத்துக் கொண்டனர். இதன் மூலம் தங்கள் பண்பாடு இழந்து மற்ற பகுதிகளில் குடியேறி கால சூழலுக்கேற்ப கலப்பு பண்பாட்டுக் கூறுகள் கடைப்பிடிக்கத் தொடங்கினர்.

### தொழில் நிலைகள்

மலையாளி இனமக்கள் வேளாண்மை முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள். இம்மக்கள் நெல், வரகு கம்பு, தினை, கேழ்வரகு, உளுந்து, கிழங்கு, சாமை போன்ற பயிர்கள் பயிரிடுகின்றனர். மாடுகளைப் பூட்டி உழவு செய்யும் காட்டை உழவுக்காடு என்றும், காட்டை சுத்தப்படுத்தி மண்வெட்டியால் கொத்துகின்ற காட்டை கொத்துக்காடு என்றும் அழைக்கப்படுகின்றனர். சில மலையாளி இனமக்களின் இடங்கள் மாறியும் உழவுத் தொழில் செய்தும் வருகின்றனர். உழவுத் தொழில் மாற்றி செய்வதால் மண்வளம் மேம்படும் என்றும், விளைச்சல் அதிக அளவில் கிடைக்கும் என்று நம்புகின்றனர். விவசாயம் தொழில் மட்டுமின்றி காப்பி தோட்டங்களில் கூலியாட்களாகவும் பணி செய்து வருகின்றனர்.

இன்றைய சூழலில் மலையாளி இனமக்கள் தொழில் நுட்ப வளர்ச்சியால் விவசாயத் தொழில் செய்ய யாரும் முன்வருவதில்லை. ஏனென்றால், அவர்கள் வயிற்று பிழைப்பிற்காகப் பல்வேறு ஊருக்குச் சென்று, அங்கு கொத்தனார் தொழில், சவுக்கு மரங்களை வெட்டும் தொழில், காப்பி தோட்டங்கள் உள்ள பணிகளைச் செய்துவருகின்றனர்.

### உணவு முறைகள்

மலையாளி இனமக்கள் ஆரம்ப காலத்தில் மலைகளில் விளைகின்ற கிழங்கு, தேன், கனி போன்றவற்றை உண்டு வந்தனர். பின்பு காலங்கள் மாறுகின்றபொழுது பல்வேறு வகையான தானியங்களைப் பயிர்களைப் பயிரிட்டு வாழ்ந்து வருகின்றனர். தினை, வரகு, பனிவரகு, கம்பு, மலைநெல், மொச்சை பயிறு, அவரை, கரு மொச்சை, செம்மொச்சை போன்ற தானிய வகைகளைப் பயிரிட்டு அன்றாட உணவுப் பொருட்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். கீரை வகைகள், காய்கறி வகைகள் மற்றும் காடுகளில் வாழ்கின்ற விலங்குகளான காட்டுப்பன்றி, உடும்பு, முயல், அணில் போன்ற விலங்கினங்களையும் பறவையினங்களையும் உட்கொண்டு வருகின்றனர். பன்றிக்கறியை மலையாளி இனமக்கள் முக்கிய உணவாகவும் விருந்து நிகழ்வுகளிலும் பயன்படுத்தப்படுகின்றனர்.

தற்காலத்தில் உணவுமுறைகளும் மாற்றம் அடைந்து வருகிறது. சமவெளி மக்களின் பழக்க வழக்கங்களில் உணவுமுறையும் மாற்றம் அடைந்துள்ளது.

### விருந்தோம்பல் பண்பு

கொல்லிலை மலையாளி இனமக்கள் விருந்தினரை உபசரிக்கும் நற்பண்பு மிக்கவர்களாக இருக்கின்றனர். உறவினர்கள், உறவினர் அல்லாத நபர்கள் வீடு தேடி வந்தால் அவருக்குத் தன்னால் முடிந்த விருந்தினை உபசரிக்கின்றனர். இப்பழக்கம்

இன்றளவும் கொல்லிமலை மக்களிடம் காணப்படுகிறது. அதுவும் தமிழரின் மரபுகளின் ஒன்றாகும்.

**தெய்வ வழிபாடு**

கொல்லிமலை மலையாளி இனமக்கள் ஸ்ரீரங்கத்துப் பெருமானை மிகவும் போற்றக் கூடியவர்கள். அறப்பளீஸ்வரர் கோயில் மிகவும் புகழ் பெற்றது. ஆடி மாதத்தில் கொல்லிமலையில் விழா நிகழ்த்தப்படுகின்றது. இதில் அனைத்து மக்களும் விழாவில் கலந்துக்கொண்டு சிறப்பிக்கின்றனர். கொல்லிப்பாவையைப் பழந்தமிழர் வழிப்பட்டனர். இன்றளவும் வழிபாடு நடைபெறுகிறது. காற்று, மழை, இடி ஆகியவற்றால் மனிதர்களுக்கு எவ்வித துன்பம் நிகழக்கூடாது என்பதற்காக நடத்தப்படுகின்றது என்று இன்றளவும் மக்களால் நம்பப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் சிறுதெய்வ வழிபாடும் பெருந்தெய்வ வழிபாடும் நடைபெறுகின்றன. இம்மக்கள் தெய்வங்கள் மீது நம்பிக்கை உள்ளவராகக் கருதப்படுகின்றனர்.

**பட்டக்காரர்**

கொல்லிமலையில் 20 முதல் 25 வரையுள்ள கிராமங்கள் சேர்ந்த பகுதியை ஒரு நாடு என்று மலையாளி இனமக்கள் குறிப்பிடுகின்றனர். இந்நாட்டின் தலைவன் மூப்பன் என்று கூறுவர். கொல்லிமலையை மலையாளி இனமக்கள் நான்கு நாடுகள் சேர்ந்தது பட்டம் என்றும் பட்டத்திற்குரிய தலைவன் பட்டக்காரன் என்றும் அழைப்பர். பட்டக்காரர் பதவி பரம்பரையானது. ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு பட்டக்காரர் இருப்பார். பட்டக்காரரே ஊர் பஞ்சாயத்துகளை முன்நின்று நடத்துவர்.

**தர்மகர்த்தா**

பட்டக்காரர் அடுத்து நிலையில் போற்றப்படுகின்றார். ஊரில் நல்லது கெட்டது என அனைத்து நிகழ்வுகளையும் அறிந்து இருப்பவர். ஒவ்வொரு நாட்டிற்கு ஒரு தர்மகர்த்தா இருப்பார். இவரே கோயிலில் நடைபெறும் நிகழ்வுகளை முன்னின்று நடத்துவார். திருவிழாக்கள் நடைபெறுகின்ற காலங்களில் ஊர் பொதுமக்கள் மாலையிட்டு மரியாதைச் செலுத்துவர்.

தர்மகர்த்தா ஊர் பொதுமக்களே தேர்தெடுக்கின்றனர். தேர்தெடுத்த பின்னர் தர்மகர்த்தா ஊர் பொது மக்களுக்குப் பன்றிக்கறி விருந்தாகப் படைக்கப்படுகின்றது. தர்மகத்தா உடல்நிலை சரியில்லாத சமயங்கள், வெளியூர் செல்லும் சமயங்களில் தனது பதவியைத் தன் சகோதரனிடம் ஒப்படைத்து விட்டுச்செல்வார்.

**ஊர்க்கவுண்டர்**

கொல்லிமலையின் மலையாளி இனமக்கள் ஒவ்வொரு நாட்டிற்கும் மூன்று

நபர்களைத் தேர்தெடுக்கின்றனர். அவர்கள் மூன்று பகுதிகளாகப் பிரித்து ஊர்காரியங்கள் நல்லமுறையில் நடத்துகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் ஊர்ப்புறம் என்ற பகுதியும் உண்டு. இப்பகுதிகளில் அமைந்துள்ள மாரியம்மன் கோயில் கூட்டம் கூடி விவாதிப்பர். வழக்குப் பேசுவதை 'ஊர் நியாயம் பேசுதல்' என்று கூறுவர். விசாரித்து நீதி வழங்கும் உரிமை ஊர்க்கவுண்டரிடமே உண்டு.

மலையாளி இனமக்கள் தங்கள் வீட்டில் நிகழும் திருமண நிகழ்ச்சியானாலும் இறப்பு நிகழ்ச்சியானாலும் ஊர்க்கவுண்டர் முன்னிலையில் நடைபெறும். அவருக்கு மரியாதையும் செய்யப்படும்.

**ஊர் பூசாரி**

ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனியே ஊர் பூசாரி என்பவர் இருப்பார். இவர் இறைவனிடம் மிகுந்த பக்தியுள்ளவராகவும் நம்பிக்கை உள்ளவராகவும் இருப்பார். இறைவனிடம் அருள் இவரிடம் இருப்பதாக மலையாளி இனமக்கள் நம்பிக்கையோடு சொல்கின்றனர். குழந்தைகள், பெரியவர்களுக்கு அவ்வவ்போது உடல்நிலை சரியில்லாத நேரத்தில் ஊர் பூசாரியிடம் அழைத்துச் சென்று திருநீறு நெற்றியில் பூசி மந்திர கையிறை கையில் கட்டுவிடுகின்றனர். அவ்வாறு செய்யும் போது அவர்களின் உடல்நிலை மேம்படும் என்று மக்கள் நம்புகின்றனர். திருவிழா காலங்களில் மாரியம்மன் கோயிலை அலங்காரம் செய்தல், பூசை செய்தல், கரகமெடுத்தல் போன்ற பணிகளை இவரே செய்வார்.

**கட்டுக்காரப் பூசாரி**

மலையாளி இனமக்கள் கட்டுக்கட்டுகின்ற பூசாரியை கட்டுக்காரன் பூசாரி என்று அழைப்பர். இப்பூசாரியின் பணி மருந்து வைத்தல், மந்திரத்தால் செய்வினை வைத்தல், பாதிக்கப்பட்டவர்களை மீட்டுதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றார். இம்மக்கள் உறவினர்களிடம் முரண்பாடு, சொத்து தகராறு போன்ற பிரச்சனைகள் நிகழ்ந்தால் கட்டுக்காரப் பூசாரிடம் சென்று 'பீல்லி சூன்யம்' வைத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றது. இப்படி செய்கின்ற பொழுது கட்டுக்காரப் பூசாரிடம் சக்தி இருப்பதாக நம்பப்படுகிறது.

**உறவுநிலை பெயர்கள்**

மலையாளி இனமக்கள் தங்களுக்கென தனிபாணியில் சில சொற்களை அழைக்கின்றனர். குடும்பக் கட்டமைப்பிற்குள் படிநிலைகளாக உறவு விளக்கப் பெயர்கள் அமைந்திருக்கும். உறவுநிலைப் பெயர்கள் இரத்தப் பந்தத்தின் நெருக்கத்தை வலியுறுத்தும் பாங்கில் அமைந்துள்ளது. இத்தகைய உறவுநிலைப் பெயர்கள் மலையாளி இனமக்களிடம் காணப்படுகின்றன. இம்மக்கள் மலைப் பகுதியில் வாழ்பவதால்

அவர்களின் மொழிநிலையும் சற்று மாறுபட்டு காணப்படுகிறது.

சில சொற்கள் கீழ்காணும்மாறு,

தமிழ்ச் சொற்கள் - வழக்குச் சொற்கள்

பெரியப்பா - பெரியாப்பா

பெரியம்மா - பெராயி

சித்தப்பா - சின்னாப்பா

சின்னம்மா - சின்னாயி

வழக்கிலுள்ள பெயர்களைப் காணமுடிகிறது.

அதே போன்று தங்கள் வாழ்வில் அன்றாடம் பயன்படுத்தும் புழங்குப் பொருட்களைத் தங்களுக்குரிய வழக்குச் சொற்களில் பயன்டுத்துகின்றனர்.

தமிழ்ச் சொற்கள் – வழக்குச் சொற்கள்

அம்மிக்கல் - சம்மதக்கல்

அரிவாள் - கறுக்கத்தி

குழம்புச் சட்டி - தாச்சிக்சட்டி

ஆட்டுக்கல் - செக்கு

துடப்பம் - சீவை

**உணவுப் புழங்கு பொருட்கள்**

மலையாளி இனமக்கள் வாழ்வில் உணவாகப் பயன்படுத்தும் பொருட்களை சில வழக்குச் சொற்களால் தனித்துவ சொல்லாடல்களால் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்ச்சொற்கள் – வழக்குச்சொற்கள்

பலாக்காய் - பலக்காய்

மிளகாய் - சணிக்காய்

பப்பாளிப் பழம் - வப்பாளிப் பழம்

சுரைக்காய் - செரக்கா

என்ற சொற்கள் வழக்கிலிருந்து மாறுபட்டு இருப்பதைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

கொல்லிமலையின் மலையாளி இனமக்கள் இன்றைய சூழல் மாற்றமடைவது கண்டு அவர்களும் மாறி வருகின்றனர். இதனால் தங்கள் மரபுகளையும் பழமை வழக்கங்களையும் தொலைத்தும் புதிய பண்பாட்டுக் கூறுகளை ஏற்கும் சூழ்நிலைக்கு தயாராகி வருகின்றதைக் காணமுடிகிறது. தொழில்கள், ஊர் கட்டமைப்புகள், வழிபாடுகள் இன்றளவும் பழமை மாறாமல் இருப்பதையும் சில மாற்றம் அடைந்து இருப்பதை இக்கட்டுரையில் காணமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. புலியூர்க் கேசிகன் (பதி), திருக்குறள் பரிமேலழகர், பூம்புகார் பதிப்பகம், சென்னை -108.
2. கௌமாரீஸ்வரி. எஸ்., (பதி) அகநானூறு - களிற்றியானை நிரை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை -14
3. ராஜாதிருவேங்கடம்.கே., கொல்லிமலை சித்தர்கள், விகடன் பிரசுரம், அண்ணா சாலை, சென்னை-02.


**Reference**


1. Puliyur Kesigan (Ed.), Thirukkural with Parimelazhagar Commentary, Poompuhar Publishing House, Chennai – 108.
2. Kaumariswari, S. (Ed.), Akananuru – Kalitriyanai Nirai: Text and Commentary, Saradha Publishing House, Royapettah, Chennai – 14.
3. Rajathiruvengadam, K., Siddhars of Kollimalai, Vikatan Publications, Anna Salai, Chennai – 02.


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**தென்னரசு. கி, “கொல்லிமலை மலையாளி இனமக்களின் வாழ்வியல் நிலைப்பாடு”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 6, இதழ் 1, சனவரி 2026, பக். 16-24


**Cite this Article in English**


**Thennarasu. K, “Kollimalai Malaiyali Inamakkalin Vazhviyal Nilaippadu”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.6 Issue 1, January 2026, pp. 16-24

# வெ. இறையன்பு படைப்புகளில் காணலாகும் சமகாலப் பெற்றோர்கள் குறித்தானச் சிந்தனைகள்

# Reflections on Contemporary Parent's found in the Works of V. Iraianbu

**விக்னேஷ்குமார்.பா,** தமிழ்த்துறை, எஸ்.ஏ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை-600 077, தமிழ்நாடு, இந்தியா.

**Vignesh Kumar.P**, Department of Tamil, S.A. College of Arts and Science, Chennai-600 077, Tamilnadu, India.

**ORCiD:** https://orcid.org/0009-0009-1773-6579

**DOI: 10.5281/zenodo.18383033**

## Abstract

Parents Introduction In the education of children, the role of parents is as crucial as that of teachers. Parents must themselves practise good habits first and then inculcate the same in their children. They should also recognize and nurture the unique talents inherent in their children, thereby instilling confidence in them. It is this confidence that ultimately leads them towards success. In this context, V. Irai Anbu is a contemporary writer who consistently expresses perceptive views on education and modern-day parenting through his works. This paper seeks to examine how he presents his reflections on contemporary parents in his writings.

## ஆய்வுச் சுருக்கம்

குழந்தைகள் கல்வி கற்பதில் ஆசிரியர்களைப் போன்று பெற்றோர்களின் பங்கும் முக்கியமானது. பெற்றோர்கள் நல்ல பழக்கவழக்கங்களை முதலில் தான் கடைப்பிடித்து அதனைப் பிள்ளைகளுக்கும் கற்றுத்தர வேண்டும். அத்துடன் தங்கள் பிள்ளைகளிடம் காணப்படும் தனித்திறமைகளை ஊக்கப்படுத்தி அவர்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அந்நம்பிக்கையே அவர்களை வெற்றி பெறச் செய்யும். அவ்வகையில் சமகாலத்தில் கல்வி குறித்தும், சமகாலப் பெற்றோர்கள் குறித்தும் தன்னுடைய படைப்பின் வாயிலாக வெளிப்படுத்தி வருபவர் வெ. இறையன்பு. அவர் தன்னுடைய படைப்புகளில் சமகாலப் பெற்றோர்கள் குறித்தானச் சிந்தனைகளை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**Keywords:** Parents, Children, Education, Success, Examination, Marks, பெற்றோர், குழந்தைகள், கல்வி, வெற்றி, தேர்வு, மதிப்பெண்.

## முன்னுரை

அறியாமை என்பதை அகற்றுவதாக கல்வி உள்ளது. அத்தகைய கல்வியை ஆசிரியர் நன்கு பாடம் நடத்தினாலும், மாணவர்கள் கற்கும் தன்மையைப் பொருத்து பாடமானது அவரது மனதில் பதியும். ஆசிரியரின் கடமை பாடம் நடத்துதல், மாணவரின் கடமை அதனை நன்கு கவனித்தல். எனவே மாணவர்கள் தங்களது பெற்றோர் எவ்வளவு சிரமப்பட்டுத்தங்களைகல்விகற்கஅனுப்புகிறார்கள்என்பதைஉணர்ந்தாலேகவனமாகப் படிப்பர். அக்கல்வியினை ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களின் மனதில் திணிக்காது பக்குவமாக எடுத்தியம்புதலே பயன் தரும். அத்தகைய கல்வி குறித்தும், சமகாலப் பெற்றோர்கள் குறித்தும் வெ. இறையன்பு தன்னுடைய படைப்புகளில் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதைப் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## பெற்றோர்கள்

ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளுக்கு முதல் ஆசிரியர்கள் ஆவர். அவர்கள் குழந்தைகளுக்கு நற்பண்புகளைச் சொல்லித் தர வேண்டும். இவ்வாறு சொல்லி வளர்க்கப்படும் குழந்தைகள் அனைவரிடமும் பண்புடையவர்களாகப் பழகுவர். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் உள்ள தனித் திறமைகளை மேம்படுத்த ஊக்குவிப்பதுடன். அவர்கள் எளிமையான வேலைகளைச் செய்வதற்குக் கற்றுக் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். அதனுடன் பிறரிடம் எவ்வாறு பழக வேண்டும். தூய்மையான ஆடைகளை அணிய வேண்டும். சமுதாய அக்கறை. சமுதாயத்துடனான நல் இணக்கம். அனைவரிடமும் அன்பு செலுத்துதல் என்பன போன்ற பண்பு நலன்களைக் கற்றுத்தர வேண்டும். குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு உண்டு. குழந்தைகள் பள்ளிக்குப் போகமாட்டேன் என்று சொன்னாலும் அவர்களிடம் அன்பாக எடுத்துச் சொல்லி பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்பதைப் பாரதிதாசன்,

> **“தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாடசாலைக்குப்**
> **போ வென்று சொன்னாள் உன் அன்னை”      (பாரதிதாசன் கவிதைகள்)**

என்கிறார். மலை வாழை போன்ற சிறப்புடைய கல்வியைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பவர்களாக ஆசிரியர்களும் பெற்றோர்களும் திகழவேண்டும்.

## பெற்றோர்களின் எதிர்பார்ப்பு

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண் பெற வேண்டும் என்று நினைத்தல் சரி என்றாலும், அத்தகைய மதிப்பெண்ணைக் குறுக்கு வழியில் எடுத்தாலும்; அதனைக் கொண்டு ஒரு வேலை வாங்கி விடலாம் என்று சமகாலப் பெற்றோர்கள் எண்ணுகிறார்கள். இது ஆரோக்கியமான சமுதாயம் அமைவதற்கு வழி

வகுக்காது. இவ்வாறு கருதுபவர்களை இறையன்பு அவர்கள்,

**"பெற்றோருக்கு ஏகப்பட்ட எதிர்பார்ப்பு**
**பள்ளி அவர்களை மேதைகளாக்க வேண்டும்**
**குறுக்கு வழிகளிலாவது**
**மதிப்பெண்களைப் பெற்று அவர்கள்**
**மகத்தான பணிகளை**
**அடைந்துவிட வேண்டுமென்று அவா.**
**காலைச் சாப்பாட்டிலேயே**
**மகன் வளர்ந்து விட வேண்டுமென**
**அதிகப்படியான பதார்த்தங்களைத்**
**தொண்டையில் திணித்தால்**
**வளர்ச்சி வராது;**
**வாந்தி தான் வரும்."** **(வைகை மீன்கள், பக்.133இ134)**

என்கிறார். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் நல்ல வேலைக்குச் செல்ல வேண்டும் என்று எண்ணுவது சரி. ஆனால் காலை உணவு மட்டுமே போதும் அதனைத் தின்றே தன் குழந்தை வளர்ந்து விட வேண்டும் என்று பெற்றோர்கள், அதிகப்படியான உணவினைக் கொடுத்தால் அவர்களுக்கு முன்னேற்றம் வராது மாறாக வாந்தி தான் வரும். அதனைப் போல பெற்றோர்கள் மதிப்பெண்களையே மதிப்பு என்று கருதி குழந்தைகளிடம் அதிகப்படியான சுமைகளைத் திணிப்பதால் அவர்களுக்குக் கல்வி கசப்பாகவே உள்ளது. மாறாக நல்ல மதிப்பெண் எடுக்க அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அதுவே அவர்களுக்குக் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தும்.

**சமகாலப் பெற்றோர்**

தற்காலத்தில் பெற்றோர்களின் எண்ணம் அனைத்தும் தன் குழந்தை அதிக மதிப்பெண் வாங்க வேண்டும் என்பதே. அதற்காக அவர்களை காலை முதல் இரவு தூங்கும் வரை தொடர்ந்து படிக்கச் செய்கிறார்கள். இது குழந்தையின் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்காது. சமகாலத்தில் பெற்றோர்; பணம் செலுத்தி தன் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் அந்தக் காலத்தில் முதன்முதலில் தனது குழந்தைக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்குப் பெற்றோர் செல்வத்தினைக் கொடுத்தனர் என்பதை சீவகசிந்தாமணி,

**"அரும்பொனு மணியு முத்துங் காணகமுங் குறுணியாகப்**
**பரந்தெலாப் பிரப்பும் வைத்துப் பைம் பொன் செய் தவிசினுச்சி**
**இருந்து பொன்னோலை செம்பொனூசி லெழுதி யேற்பத்**

**திருத்துபொற் கண்ணியாற்குச் செல்வியைச் சேர்த்தினாரே.”**
**(சீவகசிந்தாமணி, பாடல்.369)**

என்னும் வரிகள் சீவகனின் வளர்ப்பு பெற்றோர், ஆசிரியர் அச்சணந்திக்குப் பொன்னும் மணியும் கொடுத்தனர் என்றும். சீவகன் பொன்னோலையில் பொன்னாலாகிய எழுத்தாணி கொண்டு எழுதி தன் கல்வியைத் தொடங்கினார் என்கிறது.

சமகாலத்தில் தன் குழந்தை நன்றாகப் படிக்க வேண்டும், நன்றாகத் தேர்வு எழுத வேண்டும் என்பதே பெற்றோர்களின் எண்ணமாக உள்ளது. இதனால் தங்கள் குழந்தைகளுக்குப் பதிலாக பெற்றோர்களே தேர்வு எழுதுவதற்கும் தயார் நிலையில் உள்ளனர். இதனை இறையன்பு,

**“வாய்ப்பு கொடுத்தால்**
**குழந்தைகளுக்குப் பதிலாகப்**
**பெற்றோரே தேர்வு எழுதவும்**
**தயாராக இருக்கிறார்கள்.**
**மகன்களின்**
**மதிப்பெண் குறையக் குறைய அவர்கள்**
**இதயத்துடிப்பு அதிகரிக்கும்**
**நாடித் துடிப்பு குறையும்.**
**நிர்வாகம் அடிக்கடி தரும் நெருக்கடி வேறு**
**ஒவ்வோர் ஆண்டும்**
**மாநில அளவில் சாதனை புரிய வேண்டுமென**
**நிர்வாகம் தருகின்ற நிர்பந்தம்.” (வைகை மீன்கள், ப.134)**

என்னும் வரிகள் குழந்தைகளின் மதிப்பெண் குறைந்தால் பெற்றோர்களின் நாடித் துடிப்பு குறைகிறது என்பதையும் நிர்வாகமும் குழந்தைகள் மாநில அளவில் சாதனை புரிய வேண்டும் என்பதற்காக, கல்வியை மாணவர்களின் மனநிலையை உணராது அவர்களிடம் திணிக்கிறது என்கிறார்.

இவ்வாறு மாணவர்களுக்குக் கல்வியைத் திணிப்பதால் எந்த ஒரு பயனுமில்லை. ஒவ்வொரு குழந்தையும் தங்களின் தனித் திறமைக்கு ஏற்ப மதிப்பெண் பெறுவர். பெற்றோர்கள் குழந்தைகளிடம் கல்வியைத் திணிக்காது அவர்கள் நன்றாகப் படிக்கிறார்களா என்பதைக் கவனித்தாலே போதும் தேர்வில் நல்ல மதிப்பெண்களைக் குழந்தைகள் பெறுவர். தேர்வு முடிந்தவுடன் தர அட்டைகளைக் குழந்தைகள் பெற்றோர்களிடம் காட்டும்போது மதிப்பெண்ணைப் பார்த்து அவன் அதிக மதிப்பெண் பெற்றுள்ளான் நீ ஏன் அதிக மதிப்பெண் பெறவில்லை என்று கோபப்படும் பெற்றோர்கள்

மதிப்பெண்களில் மட்டும் கவனம் செலுத்தாது அவர்களது திறமையிலும் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் எவ்வளவு கற்றிருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லை எனில் எந்த ஒரு பயனும் இல்லை, ஆகையால் வயதில் முதிர்ந்தவர்களிடம் எவ்வாறு நடக்கவேண்டும், ஆசிரியர் மற்றும் தன்னுடன் பயிலும் மாணவர்களிடம் எவ்வாறு பழக வேண்டும் என்பன போன்ற பண்பு நலன்களைப் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குச் சொல்லித்தர வேண்டும்

தன் குழந்தை நன்றாகக் கற்க வேண்டும் என்ற எண்ணத்தில் பெற்றோர்கள், குழந்தைகள் நன்றாக உணவு உண்ணத் தொடங்கும் முன்பாகவே பள்ளிக்கு அனுப்புகிறார்கள் என்பதை இறையன்பு,

**“உண்ணத் தொடங்கும் முன் உணவு மூட்டையுடன்**
**பள்ளி அனுப்பிப் பரவசம் அடையலாமா?”** **(தரிசனம், ப.60)**

என்னும் வரிகளில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை உரிய வயது வருவதற்கு முன்பே பள்ளிக்கு அனுப்பி மகிழலாமா? என்கிறார். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் பள்ளி செல்வதற்குரிய வயதை அடைந்துள்ளனரா என்பதை உணர்ந்து தங்கள் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். உரிய வயது வராத குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புதல் கூடாது. ஏனெனில் வகுப்பில் ஆசிரியர் வினா கேட்கும் போது உரிய வயது வந்த குழந்தை சரியான விடையைச் சொல்லும். உரிய வயது வராத குழந்தைக்குப் பதில் தெரிவதில்லை. இது அக்குழந்தைக்குத் தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைகிறது. இதுவும் குழந்தைகளுக்குக் கல்வியின் மீது ஆர்வம் ஏற்படுவதற்குத் தடையாகவும் அமைகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை உரிய வயது வந்தவுடன் பள்ளிக்கு அனுப்புதலே குழந்தைகள் தொடர்ந்து கற்பதற்கு வழியாக அமையும். ஒரு குழந்தையின் வயது அதிகமாகவும், மற்றொரு குழந்தையின் வயது குறைவாகவும் உள்ள வகுப்பறை ஆரோக்கியமான வகுப்பறையாக அமைவதில்லை. மாறாக மாணவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதற்கு வாய்ப்பாகவே அமைகிறது. எனவே ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய குழந்தைகளுக்கு உரிய வயது வந்தவுடன் பள்ளிக்கு அனுப்புவதே பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.

**நகரக் கல்வி**

தற்காலத்தில் பெற்றோர்கள் ஆங்கிலவழிக்கல்வி கற்றலே பயன்தரும் என்று கருதி, தங்களது குழந்தைகளை ஆங்கில வழிக்கல்வி கற்க அனுப்புகிறார்கள். நகர்ப்புறங்களில் மக்கள் நெரிசல் அதிகமாக உள்ளதால் பேருந்து நெரிசலில் அகப்பட்டு குழந்தைகள் பள்ளிக்குச் செல்கிறார்கள். அப்பள்ளிகளில் நுனி நாக்கில் ஆங்கிலம் பேசும் ஆசிரியர்கள், மாணவர்களையும் ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று சொல்கிறார்கள். இத்தகைய நிலையினை இறையன்பு,

"பௌர்ணமி நிலவாய் முழுமையாய்ப் பூரண ஒளியோடு

சீருடை அணிந்து பள்ளிக்குப் புறப்பட்ட என் குழந்தைகள்

பேருந்தில் தொந்திகளுக்கு இடையில் தொடைகளுக்கு நடுவே

முதுகுகளின் இடையே சிக்கித் தவித்து பயணமாகி பள்ளியைச் சென்றடைந்ததும் நுனி நாக்கு ஆங்கில மிஸ்களிடம் அகப்பட்டு அவர்கள் பிரம்படியில் உருட்டு விழியில் மாட்டி விழித்து மறுபடியும் முதுகுகனக்கும் மூட்டைகளுடன் வீட்டுப் பாடச் சுமையையும் சுமந்து." (பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், ப.96) என்கிறார். குழந்தைகள் நிறைய புத்தகங்களைச் சுமந்து கொண்டு பள்ளிக்குச் செல்கிறார்கள். பள்ளியிலும் ஆசிரியர் குழந்தைக்கு நிறைய வீட்டுப்பாடம் கொடுக்கிறார்கள். இந்நிலையானது குழந்தைகளுக்குக் கல்வியை வற்புறுத்தித் திணிப்பதாக உள்ளது. ஆசிரியர்களும் பெற்றோர்களும் குழந்தையின் வயதிற்கு ஏற்ப கல்வியளித்தலே குழந்தைகளின் ஆரோக்கியமான கற்றலுக்கு வழிவகுக்கும்.

தற்காலத்தில் குழந்தை வளர்ப்பு என்பது இயல்பாக நடப்பது இல்லை. ஏனெனில் அதற்கு மாறாக பெற்றோர்கள் பல்வேறு சுமைகளைக் குழந்தைகளிடம் சுமத்துகிறார்கள். இச்செயலானது குழந்தையிடம் உள்ள குழந்தைத்தனத்தைத் திருடுவதற்குச் சமம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் சுமைகளைத் திணித்தல் கூடாது. அதுமட்டுமின்றி பல் முளைப்பதற்கும் முன்பாகவும், நன்றாக நடக்கத் தெரிவதற்கு முன்பாகவும் பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். அதனை இறையன்பு,

**"குழந்தை என்பது நமது எச்சமல்ல**

**நம்மைத் தாண்டிய உச்சமன்றோ!**

**நம்மை அவர் மேல் திணிப்பது நன்றோ!**

**பல் முளைக்கும் முன்பே பாடம் விதைத்து**

**அறிவு முளைக்க அவஸ்தைப் படலாமா**

**நடக்க முயலுமுன் நர்சரிப் பள்ளியை**

**கடக்க வைக்கலாமா." (தரிசனம், ப.60)**

என்கிறார். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் கல்வி கற்பதற்குரிய வயது வந்தவுடன் கல்வி கற்க அனுப்ப வேண்டும். மாறாக பல்முளைக்காத மற்றும் நடக்கத் தெரியாத வயதில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். இதனால் அவர்கள் பிற்காலத்தில் கல்வியின் பயனை அறியாது, கல்வியை நன்றாகப் பயிலாது, கல்வியை நகர்த்திச் செல்பவர்களாக உள்ளனர். சில பெற்றோர்கள் எப்போதும் தங்கள் குழந்தைகளிடம் மதிப்பெண்கள் மட்டுமே முக்கியம் என்று சொல்வதை இறையன்பு,

**"முன்னேற்ற அட்டையே முக்கிய மென்று**

**மூச்சுக்கு மூச்சு சொல்லும் பெற்றோர்.” (தரிசனம், ப.60)**

என்கிறார். மதிப்பெண்கள் என்பது ஒரு அளவுகோல் என்பதையும் தேர்வில் நிறைய மதிப்பெண் வாங்குபவர்கள் அனைவரும் நன்றாகக் கற்பவர்கள் என்றும், ஓரளவு மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெறுபவர்கள் நன்றாகப் பயில்வதில்லை என்றும் கருதுதல் கூடாது. குழந்தைகள் தாங்கள் கற்பதை நன்றாகப் புரிந்து கற்கிறார்கள் என்பதே முக்கியம். இதனை ஒவ்வொரு பெற்றோரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

கல்வியை, குழந்தைகள் விருப்பத்துடன் கற்பதற்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் வழிவகுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் குழந்தைகளின் கல்வித் தரத்தை மதிப்பீடு செய்வதால் அவர்களின் மனம் பாதிப்படைகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வியைத் திணிக்காது இருக்க வேண்டும். இவ்வாறு இருப்பின் அவர்களாகவே பள்ளிக்குச் செல்வர், அங்குள்ள ஆசிரியர்களிடம் பண்பாகப் பழகுவர், புத்தகங்களைப் பார்க்கும்போது இயல்பாகவே மகிழ்ச்சியும் அடைவர். இதனை இறையன்பு,

**“பள்ளியும் வீடும் பிள்ளைகள் தம்மை**
**பிணையக் கைதியாய் ஆக்க வேண்டாம்.**
**ஒவ்வொரு நொடியும் எடையை அளந்து**
**உயிரை உருக்கும் செயலை மறந்தால்**
**பள்ளி செல்வது மகிழ்வாய் மாறும்**
**ஆசான் எல்லாம் நேசன் ஆவார்;**
**புத்தக மூட்டை பூரிப்பு அளிக்கும். (தரிசனம், ப.64)**

என்கிறார். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு மிரட்டி அனுப்பும் மனநிலையை மாற்றி அன்பாய் அனுப்பும் செயலை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அனுப்பும்போது குழந்தைகள்; மகிழ்ச்சியுடன் பள்ளிக்குச் செல்கிறார்கள். இது அவர்களுக்குக் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. இத்தகைய நிலையினை இறையன்பு,

**“மிரட்டி அனுப்பும் நிலையை மாற்றி**
**விரட்டி அனுப்பும் மனநிலை மாற்றி**
**அன்பாய் அனுப்பும் சூழலை வளர்த்தால்**
**பாடசாலை ஆகுமே பூஞ்சோலை.” (தரிசனம், ப.64)**

என்னும் வரிகளில் வெளிப்படுத்துகிறார். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் கல்வி கற்பதற்கு ஊக்குவிப்பவராக இருக்க வேண்டுமே தவிர, மாறாக அவர்களிடம் கல்வியைத் திணிப்பவர்களாக இருக்கக்கூடாது. அவர்களின் கல்வியில் மட்டும் கவனம் செலுத்தாது

அவர்களுடைய மனநிலை, ஆரோக்கியம் போன்றவற்றிலும் கவனம் செலுத்தி. உரிய வயது வந்தவுடன் பள்ளிக்கு அனுப்ப வேண்டும்.

பள்ளிக்குச் சென்று வரும் குழந்தைகள் ஓய்வு நேரங்களில் தங்கள் குடும்பத்தின் நிலையினை நன்கு உணர்ந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். பெற்றோர்கள் குழந்தை கேட்கிறது என்பதற்காக அனைத்தையும் வாங்கித் தருதல் கூடாது. தங்கள் குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டும் எனக் கருதி தங்களது குடும்பச் சூழலைச் சொல்லாது இருத்தல் என்பது தவறு. தங்களின் குடும்பச் சூழலை அவர்களது மனதில் பதியும்வண்ணம் சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்வதால் அவர்கள் தனது குடும்பச் சூழலை உணர்ந்து கல்வியை நன்கு கற்பர். ஆதனை, 'கைமுறுக்கு காரி' என்னும் கதையின் பொன்னம்மா என்பவள் முறுக்குத் தொழில் செய்கிறாள். அவளுக்கு அவளது குழந்தைகள் பள்ளிக்குச் சென்று வந்து உதவி செய்வார்கள் என்பதை "பொன்னம்மாவின் பெண்கள் அருகில் இருக்கும் மாதா கோயில் பள்ளியில் தான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். பாக்கெட் பண்ணுவதற்கும் ஒத்தாசை செய்வார்கள்." (அழகோ அழகு,ப.20) என்கிறார். ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனும், குடும்பத்தின் சூழலை ஒவ்வொரு குழந்தையும் உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும் பெற்றோர்கள் குழந்தைகள் வீட்டில் படிப்பதை உறுதி செய்ய வேண்டும். பள்ளிக்குச் சென்று வந்து குழந்தை மாலை வேளையில் வீட்டுப்பாடம் செய்வதற்கு ஊக்கமளிக்க வேண்டும். அவ்வாறு ஊக்கமளிப்பதே கல்வியில் குழந்தைகள் கவனம் செலுத்த வழி. அவற்றுடன் நேர்மையையும், தூய்மையையும் அவர்களின் பொறுப்புகளையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

## முடிவுரை

பெற்றோர்களின் எண்ணம், சொல், செயல், பழக்க வழக்கம், கலாச்சாரம் போன்றவை குழந்தைகளின் நடத்தையிலும் பிரதிபலிக்கிறது. அதனை உணர்ந்து பெற்றோர்கள் தனது நடவடிக்கைகளை நல்வழியில் அமைத்தல் வேண்டும். அச்செயல்பாடுகளே தங்கள் குழந்தைகள் நல்வழியில் கொண்டு செல்வதற்கான பாதையாக அமையும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பிற குழந்தைகளுடன் ஒப்பிடுதல் கூடாது. அவ்வாறு ஒப்பிடுவது கல்வியில் குழந்தைகளின் ஆர்வத்தைக் குறைக்கிறது. குழந்தை குறைந்த மதிப்பெண் வாங்குகிறது எனில் அடுத்த தேர்வில் அதிக மதிப்பெண் வாங்குவதற்குண்டான வழிமுறைகளைச் சொல்லித்தர வேண்டும். அதுவே கல்வியின் மீது அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும். பெற்றோர் தங்களின் குடும்பச் சூழலை குழந்தைகளின் மனத்தில் பதியும் வண்ணம் சொல்ல வேண்டும். அது அவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதை அறிய முடிகிறது.

## துணைநின்ற நூல்கள்

1. வெ.இறையன்பு – தரிசனம், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர் - 641001. முதல்

பதிப்பு 2018.

2. வெ.இறையன்பு - வைகை மீன்கள், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர் - 641001. முதல் பதிப்பு 2020

3. வெ.இறையன்பு - அழகோ அழகு, நியூ செஞ்;சுரி புக் (பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600098. ஏழாம் பதிப்பு 2019.

4. வெ.இறையன்பு - பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், நியூ செஞ்;சுரி புக் (பி) லிட், அம்பத்தூர், சென்னை -600098. ஏழாம் பதிப்பு2016.

5. மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ) - சீவக சிந்தாமணி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை -600001. முதல் பதிப்பு, ஆகஸ்ட் 1988.

**Reference**

1. Ve.Irayanpu – Darshanam, Vijaya Publishing House, Coimbatore - 641001. First Edition 2018.

2. Ve.Irayanpu – Vaigai Meenal, Vijaya Publishing House, Coimbatore - 641001. First Edition 2020

3. Ve.Irayanpu – Alako Aagu, New Century; Suri Book (P) Lit., Ambattur, Chennai - 600098. Seventh Edition 2019.

4. Ve.Irayanpu - A Flute for Bhubala, New Cent;Suri Book (P) Lit, Ampathur, Chennai -600098. Seventh Edition 2016.

5. Manikkavasagan, Jn. (UA) - Sivaka Chintamani, Manivasakar Publishing House, Chennai -600001. First Edition, August 1988.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**விக்னேஷ்குமார்.பா, “வெ. இறையன்பு படைப்புகளில் காணலாகும் சமகாலப் பெற்றோர்கள் குறித்தானச் சிந்தனைகள் ”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 6, இதழ் 1, சனவரி 2026, பக். 25-33

**Cite this Article in English**

**Vignesh Kumar.P, “Reflections on Contemporary Parent's found in the Works of V. Iraianbu”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.6 Issue 1, January 2026, pp. 25-33